அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று அவர்கள் தம் இருக்கையில் அமர்ந்தபின் எல்லோரும் தங்கள் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை அவைமுன்னவர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. க. அன்பழகன் அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

பேரவையின் அடுத்த அலுவல் பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும்.

2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள்கள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. பேரவையின் விதி 8 உள்விதி (2)-ன்படி பேரவைத் துணைத் தலைவராக நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப் பேரவைக்கு அறிவிக்கின்றேன். அவர்கள் விவரம் வருமாறு :—

நியமனம் செய்யப்பெற்றவர்.—திரு. பி. எச். பாண்டியன்.

முன்மொழிந்தவர்.—மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.

வழிமொழிந்தவர்.—மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் இந்தப் பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS